**செய்தி வெளியீடு எண் : 525** **நாள் : 13.03.2023**

## செய்தி வெளியீடு

செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூர் தமிழ்நாடு உடற்கல்வியியல் விளையாட்டு பல்கலைக் கழகத்தில் 13.03.2023 முதல் 16.03.2023 வரை நடைபெற உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்கும் 26 வகையான 2022-23ஆம் ஆண்டிற்கான அகில இந்திய பல்கலைக்கழக தடகளப் போட்டியினை தொடங்கி வைக்கும் விதமாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.03.2023) தொடர் ஜோதியினை ஏற்றி வைத்து போட்டியினை தொடங்கி வைத்து, பல்கலைக்கழகங்களிலிருந்து வருகை புரிந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் அணிவகுப்பினைப் பார்வையிட்டார்.

**தடகளப் போட்டியினை தொடங்கி வைத்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் பேசியதாவது–**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும் சர்வதேச அளவில் விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு முதன்மை பெற்றிடவேண்டும், தமிழ்நாடு மாணவர்கள், இளைஞர்கள் சாதனை படைக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் நம்பிக்கையில் முழு முயற்சி எடுத்து வருகின்றார்கள்.

அதனடிப்படையில் விளையாட்டில் வீரர், வீராங்கனைகளுக்கு அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறந்த தொடர் நடவடிக்கையினால் உலகே வியக்கும் வகையில் செஸ் ஒலிம்பியாட் போட்டிகள், சென்னை மகளிர் ஓப்பன் டென்னிஸ் ஆகியவை சென்னையில் நடத்தப்பட்டது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும் அண்மையில் ஒடிசா மாநிலம் சென்று அங்குள்ள விளையாட்டு கட்டமைப்புகளை பார்வையிட்டு, அந்த மாநில முதலமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவலர்களை சந்தித்து, விளையாட்டு மேம்பாடு தொடர்பாக இரு மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தம் செய்துள்ளார்கள்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் மேலான ஆலோசனையின்படி, முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகள் 08.02.2023 முதல் 28.02.2023 வரை மாவட்ட அளவில் எவ்வித தொய்வுமின்றி நடத்தப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களே இந்தப் போட்டிகளை சென்னையில் தொடங்கி வைத்தார்.

இந்திய – நேபாள மகளிருக்கான நட்பு ரீதியிலான கால்பந்து, மகளிர் ஸ்குவாஷ் ஆகியவை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது நடைபெற்ற விளையாட்டு பயிற்சியாளர்கள் தேர்வில் தகுதியின் அடிப்படையில் 76 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வேலைவாய்ப்புகளில் 3 சதவீத இடஒதுக்கீடு, தேசிய, சர்வதேச அளவில் வெற்றி பெறுகின்ற வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குதல் மற்றும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம் வழங்குதல் போன்ற அனைத்து திட்டங்களையும் உறுதி செய்து நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, அகில இந்திய அளவில் 82 பல்கலைக்கழகங்களைச் சார்ந்த 1,900 தடகள வீரர்–வீராங்கனைகள் பங்கேற்கும் அகில இந்திய பல்கலைக்கழக தடகளப் போட்டி இன்று (13.03.2023) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டிக்காக 890 பயிற்சியாளர்கள் மற்றும் வீரர்களின் பெற்றோர்களும் வந்துள்ளனர். இந்தப் போட்டிகள் நடைபெறும் இந்த விளையாட்டு பல்கலைக்கழகமானது அனைத்து விளையாட்டு பயிற்சி வசதிகளும் கொண்ட ஆசிய அளவில் சிறந்த முதன்மை பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.ர.ராகுல் நாத் இ.ஆ.ப., தமிழ்நாடு உடற்கல்வியியல் விளையாட்டு பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் மு. சுந்தர், பள்ளிக்கரணை துணை காவல் ஆணையாளர் திரு.கே.ஜோஷ் தங்கையா, காமன்வெல்த் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற டாக்டர் ஆர்த்தி அருண், கபடி போட்டியில் அர்ஜூனா விருது பெற்ற திரு.மணத்தி பி. கணேசன், அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டுத் துறை வீரர்கள், வீராங்கனைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in